1978 செப்டம்பர் 8]

அமைப்புகள், பாலங்கள் அமைத்தல் போன்றவைகளை அமைத்து, பேருந்துகள் விடுவதற்குப் பொருள் உதவி செய்ய வேண்டுமென்று உலக வங்கியைக் கேட்டிருக்கிறோம். சாந்தாராம் அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். வேதாரண்யம் விஷயமாக, தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. க. அறிவழகன் : உலக வங்கி மூலமாக வாங்குகிற புதிய பஸ்கள் பழையன போல சாய்ந்த கோபுரங்கள் மாதிரி சாய்ந்துகொண்டு போவதில்லை. பழைய பஸ்கள் சாய்ந்தவாறு போய்க்கொண்டிருக்கின்றன. பொறியியல் துறையினரை வைத்து அவற்றைச் சரி செய்து ஸ்பிரிங் பிளேட் ஏதாவது பொருத்தி, புதிய பஸ்களைப் போல, நிமிர்ந்து செல்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பயணிகள் மிகுதியாக ஒரே பக்கத்தில் ஏறினால் அப்படித்தான் ஏற்படும். உறுப்பினர் கூறிய டெக்னிக் பற்றி விவரமாகத் தெரியவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : சென்னை புறநகர்ப் பகுதியில் உலக வங்கி உதவியுடன் வாங்கப்பட்ட 122 பேருந்துகள் ஓடுவதால், அங்கே முன்னால் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் கிராமப் புறங்களுக்கு அனுப்பப்பட்டனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களுக்குப் பதில் சொல்லும் போது கூறினேன். கூடுதல் பேருந்துகளாகத்தான் இந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. ஏற்கெனவே இருந்த பேருந்துகள் அந்தந்த வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

Training to Drivers and Conductors.

* 50 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal with the Government to train the bus Drivers and Conductors, particularly those working in Madras City to behave courteously with passengers and to inculcate the tendency of helping those who are new to city and others; and

(b) if not, whether any arrangements would be made to give such training ?

1978 செப்டம்பர் 8]

ஓட்டுநர், நடத்துநர்களுக்குப் பயிற்சி.

திரு. ஈ.எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பேருந்துகளில், குறிப்பாக, சென்னை நகரில் ஓடுபவைகளில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர், பயணிகளிடம் பண்புடனும், மரியாதையுடனும் நடக்கவும் நகருக்குப் புதியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவி புரிபவர்களாக இருக்கவும் அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) இல்லையெனில், அத்தகைய பயிற்சி தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஓட்டுநர், நடத்துநர்கட்கென ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பள்ளியில் இப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் அவ்வப்போது சுற்றறிக்கைகள், கையேடுகள் மூலமும் அவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. அறிவழகன் : இந்த ஓட்டுநர், நடத்துநர்கள் மிகவும் பண்புடன் நடப்பதற்குப் பல்வேறு வழிவகைகளை இந்த மன்றத்தில் நாங்கள் பேசியிருக்கிறோம். அவ்வாறு பண்புடன் நடந்துகொள்வதற்கு அவர்களுக்குப் பரிசுகள் வழங்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறோம். அப்படி அவர்கள் நடந்துகொள்வதற்கு ஒரு தீவிரமான பயிற்சியை, உள் பயிற்சியை அவர்களுக்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஓட்டுநர், நடத்துநர்களுடைய பண்பாட்டினை அளக்கக் கூடிய அளவுகோல் வைத்துக் கண்டிப்பாக நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது. ஓட்டுநர், நடத்துநர்கள் சிலர் தவறாக நடக்கும்போது, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 'இன்ஸ்டிடியூட் ஆப் ரோட் டிரான்ஸ்போர்ட்' மூலமாக அவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து, பயணிகளிடம் பணிவோடும் பண்போடும் நடப்பது பற்றிக் கற்பிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ஈ.எஸ். வெங்கடேசன் : ஓட்டுநர், நடத்துநர்களில் பெரும்பாலோர் நல்ல குணம் படைத்தவர்களாக இருந்தாலும், ஒரு சிலர் முறைகேடாக நடந்து கொள்வதால், மக்களுக்கு அரசின் மீது வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறது என்பது தெரியுமா? அப்படிப்பட்ட சிலரை நல்வழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பொதுமக்கள்தான் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். அப்படி அவர்கள் நடக்கும் போது, உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி எடுக்கப்பட்டு வரு கிறது.

[முற்பகல் 11-10]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சட்டமன்ற உறுப்பினர் களுக்கு ரயில் பயணச் சீட்டு இன்றைய தினம் வரையில் வழங்கப் படாத நிலையில் மிகுந்த தொல்லையை நாங்கள் அனுபவிக்கிற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தனியார் பேருந்து களில் பயணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவில் சட்டமன்ற உறுப் பினர்களுக்கு ரயில் மூலம் பயணம் செய்யும் வாய்ப்பை ஏற்பாடு செய்வதாக அறிவித்திருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இளம்பரிதி : முன்பு கொண்டாடி வந்த 'மரியாதை வாரத்தை' தற்போது கைவிட்டுவிட்டார்களா? ஓட்டுநர்கள், நடத்துநர்கள் எல்லாம் சேர்ந்து முன்பு மரியாதை வாரம் கொண் டாடி வந்தார்கள். இப்போது அதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் மாணவர்களுக்கும் பேருந்துப் பயணிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தும் முகத்தான் நடைமுறையில் இருந்து வந்ததைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அதை மீண்டும் நடைமுறைப்படுத்த ஏற்கெனவே இரண்டு கருத்தரங் கங்கள் போடப்பட்டிருக்கின்றன. அது பரிசீலிக்கப்படும்.

திரு. இளம்பரிதி : பொதுமக்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று முன்பு மரியாதை வாரம் கொண்டாடினார்கள். இப்போது அது போய்விட்டதுபோல் இருக்கிறது.

School Teachers

*43 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that some teachers serving in private schools have made a repesentation to the Government that the period of summer vacation not availed of by them because of attendance in the summer institutes organised by the Madras and Venkateswara Universities, be credited to their earned leave account; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?